செய்தி வெளியீடு எண் : 297 நாள் : 08.02.2025

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

## மலேசியாவில் நடைபெற்ற மகளிருக்கான T20 கிரிக்கெட் உலகக்கோப்பைபோட்டிகளில் இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு துணைபுரிந்த தமிழ்நாட்டு வீராங்கனை செல்வி கு. கமாலினி அவர்களுக்கு ஊக்கத் தொகை 25 இலட்சம் ரூபாய் !

## டெல்லியில் நடைபெற்ற முதல் கோ–கோ உலகக் கோப்பை ஆடவர் பிரிவில் இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு துணைபுரிந்த தமிழ்நாட்டு வீரர் திரு V. சுப்ரமணி அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை 25 இலட்சம் ரூபாய் வழங்கிட உத்தரவு

மலேசியாவில் 19 வயதிற்குட்பட்ட மகளிருக்கான T20 கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டிகள் ஜனவரி 18 முதல் பிப்ரவரி 2 வரை நடைபெற்றன.

இப்போட்டிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த செல்வி கு. கமாலினி இந்திய அணியில் இடம் பெற்றிருந்தார். அவர்தான் விளையாடிய ஏழு போட்டிகளில் ஒரு அரைச்சதம், 143 ரன்கள், 2 கேட்சுகள், 4 ஸ்டம்பிங் என நிகழ்த்தி அசாத்திய சாதனைகள் புரிந்துள்ளார். இந்த போட்டிகளில் செல்வி கு. கமாலினி அவர்களின் பங்களிப்பால் இந்திய அணி கோப்பையை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.

அதே போல், டெல்லியில் நடைபெற்ற முதல் கோ–கோ உலகக் கோப்பை போட்டிகள், ஜனவரி 13 முதல் ஜனவரி 19, 2025 வரை நடைபெற்றன.

இப்போட்டிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த திரு. V. சுப்ரமணி அவர்கள் அபாரமாக விளையாடியதற்காக "சிறந்த அட்டாக்கர் விருதை" வென்றார். இறுதிப் போட்டியில் நேபாள அணியை 54–36 என்ற புள்ளிக்கணக்கில் தோற்கடித்து, இந்திய அணி கோ–கோ உலகக் கோப்பையை வென்றது. இந்த போட்டிகளில் திரு. V. சுப்ரமணி அவர்களின் பங்களிப்பால் இந்திய அணி கோப்பையை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மலேசியாவில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்ட மகளிருக்கான T20 கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டியில் செல்வி கு. கமாலினி அவர்களின் இந்தச் சாதனையைப் போற்றிப் பாராட்டும் வகையில், பல விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் போட்டிகளில் பங்கேற்று, தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமைகள் சேர்த்திட ஊக்கமளிக்கும் வகையிலும் செல்வி கு. கமாலினி அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூபாய் 25 லட்சம் வழங்கிட இன்று (8.2.2025) உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், டெல்லியில் நடைபெற்ற முதல் கோ–கோ உலகக் கோப்பை போட்டிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த திரு. V. சுப்ரமணி போல மேலும் பல விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் போட்டிகளில் பங்கேற்றுத் தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமைகள் சேர்த்திட ஊக்கமளிக்கும் வகையில், அவருக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூபாய் 25 லட்சம் வழங்கிட இன்று (8.2.2025) உத்தரவிட்டுள்ளார்கள்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu